<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>

<u>O.S.No.340/2022</u>

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | **வா.சா. 1** |
| பெயர் | திரு. மாரிமுத்து |
| தந்தை பெயர் | திரு. கங்காதரன் |
| கிராமம் | கன்னியம் நகர், செய்யாறு |
| வட்டம் | செய்யாறு |
| தொழில் | அரிசி ஆலை |
| வயது | 60 |

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 21-11-2017 | எனது தந்தை கங்காதரனின் இறப்பு சான்றிதழ் - அசல் - வா.சா.ஆ.1. |
| 2. | - | எனது தந்தை கங்காதரனின் வாரிசு சான்றிதழ் - இணைய வழி நகல் - வா.சா.ஆ.2. |
| 3. | 05-02-2014 | எனது தந்தை ஏற்படுத்தி வைத்ததாக சொல்லப்படும் பதிவு மதிப்பு காணாத உயில் சாசனத்தின் சான்றிட்ட நகல் - வா.சா.ஆ.3. |

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.22 17:43:52 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**